# Healthy smiles Ontario

## 17 மற்றும் அதற்குக் கீழ் வயதுள்ள தகுதியான குழந்தைகளுக்கு செலவில்லாத ஒரு பல் மருத்துவத் திட்டம்.

**ஹெல்தி ஸ்மைல்ஸ் ஒன்ராரியோ (Healthy Smiles Ontario) என்றால் என்ன?**

பல் மருத்துவத்திற்கு எந்த வடிவத்திலும் பெறுவழி இல்லாத 17 மற்றும் அதற்குக் கீழ் வயதுள்ள குழந்தைகளுக்கு ஹெல்தி ஸ்மைல்ஸ் ஒன்ராரியோ (Healthy Smiles Ontario) ஒரு புதிய திட்டமாகும். தகுதி உடையவராக இருந்தால், உங்கள் குழந்தைகள் வழக்கமான பல் மருத்துவ சேவைகளை முற்றிலும் இலவசமாகப் பெறுவார்கள்.

**யார் தகுதி உடையவர்கள்?**

- 17 மற்றும் அதற்குக் கீழ் வயதுள்ள குழந்தைகள் கீழுள்ளபடி இருந்தால் தகுதி உடையவராவர்:
- அவர்கள் ஒன்ராரியோவில் வசிப்பவர்கள்* அவர்கள் ஒரு வீட்டின் உறுப்பினர்களாக இருந்து, சீரமைவு செய்யப்பட்ட குடும்ப நிகர வருமானம் ஒரு வருடத்திற்கு $20,000 மோ அல்லது அதற்குக் கீழாகவோ கொண்டிருந்தால்; மேலும்
- அவர்கள் எந்த வடிவத்திலும் பல் மருத்துவ காப்புக்கான பெறுவழி இல்லாதவராக இருந்தால் (ஒன்ராரியோ பணிகள் போன்ற இதர அரசு நிதியுதவியுடன் கூடியத் திட்டங்கள் உள்ளிட்டவை)

ஹெல்தி ஸ்மைல்ஸ் ஒன்ராரியோவிற்காக (Healthy Smiles Ontario) தகுதி சம்பந்தமான தேவைகளைப் பற்றி அதிகம் அறியவும் தகுதியை சரிபார்க்கத் தேவையான ஆவணங்களுக்கும், கட்டணமற்ற சர்வீஸ் ஒன்ராரியோ இன்போலைனை 1-866-532-3161 லும், டிடிஒய் கட்டணமற்றதை 1-800-387-5559 லும் அழையுங்கள், அல்லது உங்கள் உள்ளூர் பொது உடல்நலப் பணிப் பிரிவுகளைத் தொடர்பு கொள்ளுங்கள். பொது உடல்நலப் பணிப் பிரிவுகள் பட்டியலை ontario.ca/healthysmiles இல் காணலாம்.

**நான் எப்படி விண்ணப்பிப்பது?**

விண்ணப்பிப்பதற்கு நீங்கள் உங்களது உள்ளூர் பொது உடல்நலப் பணிப் பிரிவைத் தொடர்பு கொள்ள வேண்டும்.உங்களது பொது உடல்நலப் பணிப் பிரிவு, படிவத்தை பூர்த்தி செய்வது மற்றும் தேவையான ஆவணமாக்குதலைக் காண்பிப்பது உள்ளிட்ட விண்ணப்ப நடைமுறைக்கும் கூட உங்களுக்கு உதவும்.

**எந்த சேவைகள் காப்பு எல்லைக்குட்படும்?**

- பல் மருத்துவர் அல்லது வாய் நல மருத்துவர் போன்ற உரிமம் உள்ள பல் மருத்துவம் வழங்குநரிடம் வழக்கமாகப் பார்க்கச் செல்லுதல்
- சுத்தப்படுத்தல்
- நிரப்புதல்
- எக்ஸ்ரேக்கள்
- தோல் தடிப்பு நோய்
- இன்ன பிற

**எந்த சேவைகள் காப்பு எல்லைக்குட்படாதவை?**

- பல் வெண்மையாக்குதல் போன்ற அழகூட்டுகின்ற பல் மருத்துவம்
- பல் இறுக்கி போன்ற பற்கள் சீரமைப்பு இயல்
- அவசர வாய் நலம் பேணல்

17 மற்றும் அதற்கு கீழ் வயதுள்ள குழந்தைக்கு ஓர் உடனடி அல்லது அவசர வாய் நலம் பேணலில் பிரச்சினை இருந்தது எனில், குழந்தைகள் சிகிச்சை தேவை ( சிஐஎன்ஓடி) (CINOT) திட்டத்தின் கீழ் சேவைகள் காப்பு எல்லைக்கு உட்படுத்தப்படலாம். தயவு செய்து உங்கள் உள்ளூர் பொது உடல்நலப் பணிப் பிரிவைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மேலும் விபரமறிய ontario.ca/cinot க்குச் செல்லுங்கள்

**ஹெல்தி ஸ்மைல்ஸ் ஒன்ராரியோவின் (Healthy Smiles Ontario) பகுதியாக பல் நலம் பேணலுக்காக என் குழந்தை எங்கே அணுகலாம்?**

விண்ணப்ப நடைமுறை பூர்த்தி ஆகி விட்டதெனில், உங்களது உள்ளூர் பொது உடல்நலப் பணிப் பிரிவு உங்கள் சமுதாயத்தில் இருக்கக் கூடிய பல் சம்பந்தமான சேவைகளில் உள்ள விருப்பத் தேர்வுகள் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கும். தனியே தொழில் செய்வது மற்றும் /அல்லது ஒரு பொது உடல்நலப் பணி பிரிவு அல்லது சமுதாய பல் மருத்துவ சிகிச்சையகம் ஆகியவற்றில் உள்ள பல் மருத்துவ வழங்குநர்கள் உள்ளிட்டோர் நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் என்பதைப் பொருத்து இதில் அடங்கும்.

**எனது குழந்தை எனது சொந்த பல் மருத்துவரைப் பார்க்கலாமா?**

ஹெல்தி ஸ்மைல்ஸ் ஒன்ராரியோ (Healthy Smiles Ontario) திட்டத்தில் உங்கள் குழந்தை பங்கேற்பவராக இருந்தால், உங்கள் பல் மருத்துவரை தொடர்ந்து சந்திக்க முடியும். உங்களது பல் மருத்துவர் திட்டத்தில் பங்கேற்பவராக இல்லை எனில், நீங்கள் உங்கள் பகுதியில் உள்ள சுயேச்சையான ஒரு பல் மருத்துவரையோ அல்லது வாய் நல மருத்துவரையோ, இந்தத் திட்டத்தில் அவர் பங்கு பெறுகிறாரா என்பதை அறியத் தொடர்பு கொள்ளலாம்.

Catalogue No. 015180 October 2010 "Healthy Smiles Ontario" Tamil © 2010 Queen's Printer of Ontario

Ontario